
ஓம்

# ஆத்ம ஜோதி



சாரதா நாதன் ஜயபரம ஹம்ஸனவன்
பாரதான் மாவெனவே பார்.

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| சோதி 7 | ஜயவருஷ மாசிமீ 1-ந்உ (14-1-55) | சுடர் 4 |
|---|---|---|


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சித்தமாந்தன்னை | 97 |
| 2 | நான் யார்............ | 98 |
| 3 | கடவுள் பக்தியும் ஹடயோக சித்தியும் | 99 |
| 4 | முருகன் வணக்கம் | 104 |
| 5 | சினத்துடன் பொறியெழ | 105 |
| 6 | குருவேதான் தெய்வம் | 105 |
| 7 | ஞானியின் போதனை | 106 |
| 8 | விவேகசூடாமணிச்சாரம் | 108 |
| 9 | சத்தியமும் பக்தியும் | 109 |
| 10 | யோகக்கலையின் உயர்வுகண்டேன் | 110 |
| 11 | தொண்டுசெய்........... | 112 |
| 12 | ஸ்ரீகேதார் பத்திரி யாத்திரை | 113 |
| 13 | வாழ்வின் லட்சியம் | 118 |
| 14 | காலமும் குறிக்கோளும் | 121 |
| 15 | யாரறிவார் | 123 |
| 16 | திரு அருள்நிறைந்த............ | 126 |
| 17 | செய்தித்திரட்டு | 127 |
| 18 | Mahatmas True & False | (Cover 3rd Page) |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
*60, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு*

பதிப்பாசிரியர்:— நா. முத்தையா
*ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]*




உ

### சித்தமாந் தன்னைத் தெரிதலே பெரிய
### சித்தியு மாகும் முத்தியும்,அதுவே

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல்கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்தி னும் புகுத்தலாம்
சலமே னடக்கலாம் கனன்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

*-தாயுமானவர்.*

பொழிப்புரை:-

குதிரைகளையும் மதயானைகளையும் வசப்படுத்தி நடத்தலாம் கரடி வாயையும் புலிவாயையும் கட்டுதல் கூடும். சிங்கத்தின் முதுகிலேறிச் சவாரிசெய்யலாம், பாம்புகளை ஆட்டிவைக்கலாம், நெருப்பில்பாதரசத்தை விட்டு, பஞ்சலோகங்களைப் பரிசவேதிசெய்து விற்றுப் பிழைக்கலாம். வேறொருவர் காணாதிருக்க உலகிலே சஞ்சரிக்கலாம், தேவர்களை ஏவல் கேட்கப் பண்ணலாம், சதாகாலமும் இளமையோடு வாழலாம். வேறொரு சரீரத்தினும் பிரவேசிக்கலாம், நீரின்மேல் நடக்கலாம், நெருப்பின்மேல் இருக்கலாம், நிகரில்லாத சித்திகளையும் பெறலாம், ஆனால், என் சிந்தையைக் கோயிலாகக் கொண்ட, ஞானவடிவமான தெய்வமே! மனத்தை அடக்கி சும்மா விருக்கும் வகைமிகவும் அருமையாகும். (பெருங்கஷ்டமான விஷயம் என்பதாம்)

# நான் யார்?

(1) வெளிநின்று கதவிடித்தால் வீட்டிலுள்ளோர்
வினவுகின்றார் "யாரென்று" நானென்கின்றோம்.
வெளிமுதலாச் சேர்ந்தமைந்து வினைக்கு ஈடாய்
விளங்குமுடல் "யாரென்னல்" விவேகமாமோ!
துளியேனும் சிந்தித்தால் உண்மை தோன்றும்
துணிமணிபோல் எனதெனலால் "நானன்றென்று"
அளியாலே அருட்பார்வை கொண்டு காட்டும்
"அருணை வளரெழில் ரமணன்" அருட்சொற்கேளீர்!

(2) உள்ளதெது? என்றுள்ளே உசாவிச்சென்றால்
உணர்கின்ற பொருள்கடந்து உணர்வுதானாய்
விள்ளமுடியாதெங்கும் விளங்குகின்ற
விவேகமெனும் பொருளொன்றே மிஞ்சிநிற்கும்
"கள்ளமிலா துள்ளத்தின் நிலையைநாடும்
கதியாலே காணென்றான்" கருணை என்னே!
"பள்ளமதில் நீர்தங்கும் பான்மைபோல"
பலவென்னும் பண்படங்கி ஒன்றாய்க்காண்போம்!

(3) நானென்ற பொருள்கண்டால் நாட்டிற்றோன்றும்
"நான்பெரியன், நீசிறியன்" என்னல்தோன்றா,
கோனென்றும் குடியென்றும் குணவானென்றும்
குலமற்ற பதடியெனும் குறையுமில்லை
வானொன்றே அனைத்துக்கும் இடம்கொடுத்து
வாழ்கின்ற தன்மைபோல் வாழ்வுதங்கும்
"நானென்ற" தன்மையிடம் இல்லையென்றால்
நலிவில்லை மூவிடமும் நாமேயாமால்!

ஒ. இரா. அத்ரி



# கடவுள் பக்தியும் ஹடயோகசித்தியும்

**(ஆசிரியர்)**

நாம் வாழும் நவீன உலகில் விஞ்ஞானமானது ஒரு கணமாவது சும்மாயிராது தொழில் புரிந்து, நாளொரு கொள்கை பொழுதொரு மாற்றமாக முன்னேறிச் செல்கின்றது. மனிதனது மூளையிலும் பார்க்கத் தீவிரமாகக் கணிதம் செய்யும் இயந்திரங்களை அது சிருஷ்டித்துள்ளது. யூனிவக்(Univec), ஐவிஎம் 701 ( I B M) ஆகிய இரண்டையும் உதாரணமாகக் கொள்ளலாம். அமெரிக்க ஜனாதிபதி ஐஸன் ஹோவரின் தேர்தல் புள்ளிகளை மிகவும் நுட்பமாகக் கணக்கிட்டு, அவரின் தேர்தல் வெற்றியை யூனிவக் யந்திரம் நிச்சயமாகக் காட்டியவிதமானது அற்புதத்தில் அற்புதமானதாகும். காந்தம், மின்சாரம், றேடியோ அலைகள் முதலாய இயற்கைச் சக்திகளைக் கொண்டு விஞ்ஞானம் தரும் வியன் காட்சிகள் கணக்கில. இருள்சூழ்ந்த இராக்காலத்தை ஒளிநிறைந்த பகலாக மாற்றுவதுடன் நின்றுவிடாது, செயற்கை முறையால் மழை பெய்யச்செய்யும் நிலைக்குக்கூட அது வந்துள்ளது. ஒவ்வொரு நிமிடமும் தொகை பெருகிவரும் உலகமக்களின் உணவுப்பிரச்சனையை, ஆறு, குளம், குட்டைகளின் நீர்மேல் பாசிப்பொடிபோல் மிதக்கும்சிறுபொருளான கிளோறெல்லா (Chlorella) மூலம் தீர்க்கமுடியுமெனக் கூட விஞ்ஞானம் பறைசாற்றுகின்றது.

அறிவுத்துறையில் மனித சமுதாயம் இவ்வித தீவிர முன்னேற்றத்தை அடைந்து செல்லும் இக்காலத்தில், ஆத்மீகத் துறையில் மகான்களால் புறக்கணிக்கப்பட்ட, ஞானவாழ்வுக்குத் தடையானவையென விலக்கப்பட்ட, அற்ப சித்திகளைக்கண்டு மக்கள் மயங்குதல்அறியாமையின் பாற்பட்டதாகும். படித்தவர்களென்றும் பக்தர்களென்றும் தங்களைப் பாராட்டிக் கொள்பவர்களே இப்படியான செப்படிவித்தைகளைப் பார்க்கவும் மெச்சவும் முயலுதல் வெட்கத்திற்குரிய ஒன்றாகும். அத்தோடு, அவற்றைப் பற்றிப் பிரசாரம் செய்

வதும், அவற்யை பகிரங்க மேடைகளில் செய்து காட்டுவதும், ஆத்ம வளர்ச்சிக்குரிய ஹடயோக, ராஜயோகக் கலைகளை, கண்கட்டி வித்தை, மல்யுத்தம், வாள்வித்தை முதலானவற்றின் கீழ் நிலைக்குக் கொணர்வதை யொக்கும். கண்கட்டி வித்தை காட்டுவோன் பிறரை ஏமாற்றுகிறானே யன்றி தான் ஏமாறுவதில்லை, சில்லறைச் சித்திகாட்டும் சாமியாரோ தன்னையும் ஏமாற்றிப்பிறரையும் ஏமாற்றுகிறார். எனவே, சித்தியில் சிக்கினசாது கண்கட்டி வித்தைக் காரனிலும் பார்க்கப் பன்மடங்கு கீழ்நிலையிலுள்ளவரெனலாம்.

இற்றைக்கு இருபத்தேழு ஆண்டுகட்கு முன், சென்னையில் டக்றர் அன்சாரி அவர்களின் தலைமையில் நடந்த இந்திய காங்கிரஸ் மகாநாட்டு மண்டபத்தருகில் ஓர் கொட்டகையில், இந்தியாவின் நாலாபக்கங்களிலிருந்து வந்த சாதுக்கள் கூடி ஓர் மகாநாடு நடத்தி, பலஹடயோக சாதனைகளைச் செய்து காட்டினர். பெருங்கூட்டஞ் சேர்ந்தது சில அன்பர்களுடன் யாமும் போயிருந்தோம். நிகழ்ச்சிகள் பார்த்தோர் பிரமிக்கக்கூடிய விதத்தில்தான் இருந்தன. ஆனால், அன்று வியத்தகும் வித்தைகள் காட்டிய சாதுக்களில் எவராவது நாளடைவில் ஆத்மீக வாழ்வில் வளர்ச்சி யடைந்து, உலகத்துக்கும் தமக்கும் நன்மை பயக்கும் விதத்தில் ஞானானுபவம் பெற்றதாய் இதுவரையில் நாம் கேள்விப்படவில்லை. இந்துமதத்தின் அதிஷ்டவசமாக, அவ்வித மகாநாடு எதுவும் பின்னர் இந்தியாவில் கூட்டப்படவில்லை. ஹடயோகத்தின்முடிவு ராஜயோகம்; ராஜயோகம் அஷ்டாங்க ஞானயோகத்தின் அடிப்படை, அதின் நோக்கம் ஆத்மானுபவம். பிராணாயாமத்தினாலோ அல்லது கேவலம் கும்பகத்தினாலோ வயப்பட்ட மனதை. அதோடு விட்டுவிடாமல் பிரத்தியாகாரம், தாரணை ஆகிய மேற்படிகளில் பயிற்றா விட்டால், தியானம் சித்திக்காது; சமாதி நிலைகை கூடாது. நீடித்த காலம் செய்த ஹடயோக சாதனைகள் அனைத்தும் வீண்பிரயத்தனமாக முடியும். இவ்விதம் வாழ்வைப் பாழாக்கிய போலி யோகிகள் கணக்கிலர். பதினொரு மாசங்கட்கு முன் புதுடில்லியில் ஒரு சாமியார் ஒருமண்டலகாலம் ஊணின்றியும் நீர் பருகாமலும், காற்றைச் சுவாசிக்காமலும் மூச்சை வெளிவிடாமலும் சமாதியில் இருக்கப் போவதாக வாய்ப்பறைசாற்றியதும், அவரது அடியார் குழு அதைப்பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் செய்ததும், ஒன்பதாளுள் அவரது உடல் சவமாகக்கிட



ந்த செய்தியும் உலகறிந்த விஷயங்கள். இந்தத்துக்கநிகழ்ச்சிக்கு மூன்றுமாசங்கட்கு முன், மைசூர் மாகாணத்தைச் சேர்ந்த பத்திராவதியில் இன்னுமோர்யோகியார் அதேவித அதோகதியடைந்தனர். அவரது யோகசித்தியை அங்கே பிரசாரஞ் செய்ய உடன் பட்ட அன்பர் வீட்டில் விருந்தாளியாக இருக்கும் சந்தர்ப்பம் சென்ற சித்திரைமாசத்தில்எமக்குக்கிடைத்தது. சாமியாரின் உடலை அடக்கஞ்செய்துள்ள இடத்தை எமக்குச்சுட்டிக் காட்டி கண்ணீருடன் தமதுஅறியாமை குறித்துப் பச்சாத்தாபப்பட்டு பெரிதும் வருந்தினார், அந்த அன்பர்.

பின்னலூர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களைப் பற்றி 'ஆத்மஜோதி' வாசகர்கள் பலர் கேள்விப் பட்டிருக்கிறார்களென நம்புகிறோம், அவரது சுயசரிதை மிகவும் விசித்திரமும் ருசிகரமுமானது. தென்னாட்டில் ஹடயோக சாதகர்களுள் அதிகம் புகழ் படைத்தவர் அவர், பகவான் ஸ்ரீரமணமஹரிஷிகளின் தீட்சைபெற்று உண்மையான ஆத்மீகவாழ்வில் இறங்குமுன் 'யோகியார்' 'சாமியார்' என்று அழைக்கப்பட்டார். கேசரியோகசித்தியும் அவருக்கிருந்தது, மற்றையவர்கள் நிலத்தின் மேற்செய்யும் சாதனைகளை அவர் சலத்தின்மேலிருந்து செய்து காட்டுவார். மெய்ஞ்ஞான குருவைஅடையவேண்டிய காலம் கிட்டப்போலும், யோக அப்பியாசங்களில் அவருக்கு இருந்த பெரிய மயக்கத்தைத் தீர்க்குமுறையில் ஓர் சம்பவம் நேர்ந்தது ஒருமுறை அவர் தலயாத்திரைக்காக புகையிரதமார்க்கம் செல்லும்போது, அவர் பிரயாணஞ் செய்த புகைவண்டி ஓர் நிலயத்தில் அதிக நேரம் தாமதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எதிர் பாராத இந்தச்சந்தர்ப்பத்தைப் பிரயோசனப் படுத்த விரும்பிய ஒருபிரயாணி (தாடிச்சாமியார்) புகைவண்டி நிலைய மேடையை தமது ஹடயோகக்காட்சிச் சாலையாக மாற்றிக் கொண்டார். பலவித ஆசனங்களைச் செய்து காட்டியபின், நாக்குநுனியை மேல் வளைத்து நிறுத்தியும், குடலை வளைத்து வயிற்றைச் சுருக்கியும், மூச்சை நிற்பாட்டி நிமிர்ந்து நின்றும், கேசரி யோக, உட்டியாணா, அஸ்வனி முத்ராச்சித்திகள் காட்டி பிரயாணிகளைத் திகைக்க வைத்தார். முடிவில் ஒவ்வொரு பிரயாணப் பெட்டியின் வாசல் முன்நின்று பல்லை இழித்துக்காட்டி கையை நீட்டிக் கெஞ்சிப் பைசா கேட்டார். ஆரம்பத்திலிருந்து

இறுதிவரையில் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்த இராமலிங்கம் பிள்ளையின் உள்ளத்தில் வெட்கமும், துக்கமும், அருவருப்பும் போட்டியிட்டெழுந்தன. 'யோகம்' என்ற பெயரால் தாம் பல்லாண்டுகளாகப் போற்றிப் பயின்று பெருமை பாராட்டிய கலையின் சிறுமையையும் பிச்சை யெடுக்க அது உதவுந் தன்மையையும் உணர்ந்தார். தம்முடன் எப்போதும் எடுத்துச் சென்று விளம்பரப் படுத்திய ஹடயோக நூல்களையும் அட்டைப் படங்களையும் எடுத்து வெளியே வீசினார். அத்தினந்தொட்டே, பக்தி நெறியிலும் ஞான நூலாராய்ச்சியிலும் ஆர்வத்துடன் இறங்கி, அவற்றின் பயனாக, சற்குருவின் தரிசனம் பெறும் பாக்கியம் பெற்று துரியானந்தரானார். இந்த இடத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவாய் மொழி யொன்றை வாசகர்களின் நினைவுக்குக் கொணர விரும்புகின்றோம். அவரின் அடியார்களுள் ஒருவர் ஒரு நாள் அவரிடம் சென்று, ஓர் யோகியார் கங்கையின் நீரின்மீது நடந்து செல்கிறாரென்று மிகவும் வியப்புடன் கூறினார். அதைக்கேட்ட பரமஹம்ஸர் சிரித்துக் கொண்டு, "ஓடக்காரனுக்கு இரண்டணாக்கொடுத்தால் கங்கையின் இக்கரையிலிருந்து அக்கரை செல்லலாம். இந்த இரண்டணா சித்திபெற, பாவம் அந்த யோகியார் எத்தனை ஆண்டுகளை வீணாக்கினாரோ?" என்றார். இதே முறையில் நமது சமயத்தில் தோன்றிய மகான்கள் எல்லாரும் ஆத்மீகவாழ்வுக்குச் சித்திகள் பெருந்தடை யென்ற உண்மையை வற்புறுத்தியுள்ளார்கள். இந்த மலரின் முதல் பக்கத்தில் பொழிப்புரையுடன் தரப்பட்டுள்ள தாயுமானார் திருவிருத்தத்தைக் கருத்தூன்றிக் கற்குமாறு வாசகர்களைக் கேட்கின்றோம்.

தவத்தின் பரிபாகத்தினால் பக்குவமான காலத்தில் ஞானிக்குச் சித்திகள் உண்டாகலாம், ஆனால்பிரபஞ்சத்தையே ஆத்ம ரூபத்திலிருந்து வேறாகக் காணாத அந்த ஞானிக்கு, தவத்தினாலுண்டாகும் அச்சித்திகளும் ஆத்மரூபத்தைப் பார்க்கிலும் வேறென்று தோன்றா. அந்த உன்னத நிலையில், அவற்றைக் காட்டி புகழையும் பணத்தையும் அடியார் கூட்டத்தையும் தேடி அலையும் ஆசை எப்படி உதிக்க முடியும்?



"சித்தத்தின் சாந்தியதே சித்தமா முத்தியெனிற்
சித்தத்தின் செய்கையின்றிச் சித்தியாச்-சித்திகளிற்
சித்தஞ்சேர் வாரெங்ஙன் சித்தக் கலக்கந்தீர்
சித்திசுகந் தோய்வார் மொழி"

என்பது பகவான் ரமணரின் திருவாக்கு. அவர் மீது சந்நிதி முறை பாடிய முகவைக் கண்ண முருகனார், அந்த அரியநூலின் ரமணபுராணம் என்னும் பாகத்தில்,

"தன்னை எழுப்பிவிடில் தானே தனிப்பொருது
துன்னலரை யெல்லாந் தொலைப்ப லெனுமோர் முடன்போல
தாமியங்குந் தன்மை சிவசத்தியா லென்றுணரார்
தாமயங்கிச் சித்திபல சார்வதாச் சேட்டிப்பார்
உச்சமத்த மாக்கள் உளறுபடி யூக்கமாம்
அச்சமர்த்தை எள்ளிநகையாடுவோன் தாள் போற்றி"

என்று, சித்திகள் செய்வதாக வாய் நீளங் காட்டுபவரின் அற்ப மதியை அழகாக விளக்கியுள்ளார். புகழின் மீதுள்ள மோகமே சில சாதுக்களைச் சித்திவிளையாட்டில் ஈடுபடச்செய்து விடுகின்றது. அவற்றைக்கண்டு அடிபணிந்த மக்கள் அவை மறைந்ததும் அச்சாதுக்களைப்புறக்கணிப்பது நிச்சயம். எத்தனையோ சாதுக்களின்வாழ்வில் கண்கூடாகக்கண்டு தேர்ந்த உண்மை இது. தாசி மையலில் சிக்கின சாது நாளடைவில் அவள் மோகத்திலிருந்து விடுதலை பெறலாம். ஆனால், ஒருதரம் புகழுக்கு அடிமையானால் அதிலிருந்து மீளுதல் மிகவும் கஷ்டமான காரியம். "பொல்லாப் புகழ்ச்சியாம் வேசிவசம் புக்கரடிமை யகலவிட லம்மாவரிது" என்கிறார் ஒரு சிவஞானி. ஆத்மீக வாழ்வில் ஈடுபட்டு, உண்மையான ஞானானுபவம் பெறவிரும்பும் சாதகர்கள், பக்தி, ஞான, கர்மயோகப் பாதைகளில் சித்தி பெற்ற மகான்களை அண்டி அவர்கள் உபதேசங்களின்படி வாழ்ந்தார்களானால், அற்ப சித்திகளில் மயங்கும் அபாயத்தில் ஒருகாலும் சிக்கமாட்டார்கள். இக்கலியுகத்தில் பக்தி நெறியே சிறந்தது; அதில் இறைநாமஜெப சாதனைக்கு இணையாவது பிறிதொன்றில்லை. 'சத்-சங்கம்', 'தரிசனம்', மெய்ச்சாது', முதலாயவிஷயங்கள் குறித்துஓர் அன்பர் கேட்ட கேள்விகளுக்கு, ஸ்ரீசுவாமி சின்மயானந்தர் சிலமாசங்

கொடுத்த பதிலை பிறிதோரிடத்தில் காண்க. புதுடில்லி. வம்பாய். சென்னை, பூனா முதலாய பட்டினங்களில் 'ஞானவேள்வி' மூலம் நாஸ்திகரை ஆஸ்திகராக்கும் அரிய பணியில் ஈடுபட்டுள்ள பெரியார் சின்மயானந்தர். கடவுள் நெறியைப் புறக்கணித்த கல்விமுறையின் பயனாக, அஞ்ஞான இருளில் சிக்கி வாழ்வின் லட்சிய பாதை இழந்த மக்களுக்கு ஞானஒளி காட்டுவதையே தமது வாழ்வின் தவயக்ஞமாகக் கொண்டுள்ளார் அவர். அவரது உபநிடத உபதேசங்களைப் பருகி மனமாற்றம் அடைந்த பட்டதாரிகள் கணக்கிலர். இன்றைய இந்துமத சமுதாயம் தேவைப்படும் சித்தி இதுவேயாம்.

## முருகன் வணக்கம்

காமமொடு கடுஞ்சினநீ யொழித்தாயில்லை
கனவினிலும் பிறர்மகிழ்வுக் குதவவில்லை
பாவமதே செய்தபயன் கண்டுகண்டும்
பரனடியே நம்முடிவென் றெண்ணவில்லை
தேவனவன் திருமுருகன் திருத்தாள்சூடும்
திறத்தவர்பாற் சேர்ந்துபணி செய்தாயில்லை
நாணமிலா வென்னெஞ்சே முருகன்பாத
நச்சினாய் நறுந்தேனை யீதுநன்றே

பிறந்திறந்து வருகின்றாய் சிருஷ்டிதொட்டு
பிதற்றுகிறாய் விதியிதென்று மூடநெஞ்சே
மறந்துமொரு கணமேனும் முருகன்நாமம்
மறவாத சிந்தையார் மலர்ப்பாதத்தை
சிறந்துநீ சிரசின்மேற் சூடாப்பாவத்
தீதிதுகாண விதியிதுவே யினிமேலேனும்
மறந்தபிழை பொறுத்துனது மலர்த்தாள் போற்றும்
மாதவத்தோர் தமைச்சேர்ப்பி மறையோயென்னே.

சி. இராசரத்தினம்.



## சினத்துடன் பொறியெழ

எடுப்பு

சினத்துடன் பொறியெழ விழித்தெனை உதைத்தாலும்
திருவடி யன்றியொரு துணையுமில்லை, ஐயனே! (சின)

தொடுப்பு

அனைத்துயிர்க் கும்உயிராம் உனைத்தவிர்த் திவ்வுலகில்
அடிமைசெல் வதுமெங்கே? நடன சிகாமணியே (சின)

முடிப்பு

பெற்றவள் வெறுத்திட்டால் பிள்ளையின் நிலை யென்னே?
பெருங்கடல் மறுத்திட்டால் சிறுநதி கதியென்னே?
குற்றங் குறைகள்பல கோடி யிருந்திட்டாலும்
குழந்தை யெனப்பொறுக்கும் குணமும் உனக்குண்டன்றோ? (சின)

"பரமஹம்ஸ தாசன்"

## குருவேதான் தெய்வம்

(கவிஞர். கா. சீ. திருவாழ்மார்பன்)

இராகம்: மலகரி. தாளம்: ஆதி.

பல்லவி.

குருவே குருவே குருவேதான் தெய்வம்
குருவே தான் தெய்வம்; உலகினில் (குருவே)

அனுபல்லவி.

சும்மா உலகில் சோம்பித் திரியாதே
பெம்மான் குருவே சும்மா விடாரே (குருவே)

சரணம்

அறிவின்றி அலைந்திடும் அசடனே உனக்கு
அறிவினை அளித்திடும் உருவே குருவே (குருவே)

சூதுகள் நிறைந்த உலகில் உன்னை
வாதுகள் தன்னில் அகப் படாமல்
கூத்திடும் மாயப் பேயிட மிருந்து
காத்திடும் துணையே குருவே தானே (குருவே)

பிருந்தமாம் மாயையை வேருடன் களைவார்
வருந்திடும் போதும் ஆறுதல் சொல்வார்
கன்றினும் இனிதாய்க் கனிந்தே பேசுவார்
நன்றே உன்னை நல்வழி நடத்தும் (குருவே)

# ஞானியின் போதனை

[தென்னாப்பிரிகா-டர்பன் - திரு. ச. மு. பிள்ளை அவர்கள்]

சீக்கியரின் புனிதநூல்களுள் ஒன்றான 'சுக்மானி'யில் ஓர் கதையுள்ளது. அது வருமாறு.

கீழ் நாட்டு ஞானி ஒருவர் ஒரு கிராமத்திற்கு வருகின்றார். அப்பெரியாரது ஆசியைப்பெறக் கடைகளை விட்டும், வீடுகளை விட்டும் வேலைகளை விட்டும் வெளியே வந்து அநேகர் கூட்டமாகக் கூடுகின்றனர். அவர்களுட் சிலர் பெரியார் முன்வந்து அஞ்சலி செய்த வண்ணம், "ஆர்ய! நாங்கள் அமைதி பெறப் போதிக்க வேண்டும்" என வேண்டுகின்றனர். அப்பொழுது அங்கு என்ன நடந்தது? வெற்று மௌனம்; கேவலம் அமைதி!

அதைக்கலைத்த வண்ணம் கிராமத் தலைவன் – நாட்டாண்மைக்காரன் அவர் முன்விரைந்து ஆவலுடன் வந்து, "ஐயா! திருவாய்மலருங்கள்! நாங்கள் வாழ்க்கையறிவை விரும்பியுள்ளோம்" எனவேண்டுகின்றான். அவரும் அன்படக்கத்துடன் உவந்து எழுந்து தமது கமண்டலத்தினின்றும் ஒரு கனியை வெளியே எடுத்து மக்களுக்குக் காட்டிப் புன்னகை செய்து அமருகின்றார். அமைதியும் வியப்புங்கொண்ட அக்கூட்டத்தினர், "ஐயன்மீர்! இதென்ன? கூறுங்கள், கூறுங்கள்!" என்று விழைகின்றனர். புன்னகையுடன் அவ்வறிஞர் கூட்டத்தினரைத் தம் அருட் கண்களால் கடைக் கணிக்கின்றார்.

"உங்களுக்கு நான் ஒன்றுங்கூறவில்லையா? சமிக்ஞையில் கூடவா? நான் இப்பழத்தை உங்களுக்குக் காண்பித்தேன். அப்பழங்கூடவா உங்களுக்குப் போதிக்கவில்லை," அப்படியானால் நான் சொல்லுகிறேன்.

"ஆம்! உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஒரு மரம் போன்றது. ஆயினும், சிலர் தான் அவ்விருக்ஷத்தை அன்புநீர் பாய்ச்சி அமைதியுற வளர்க்கின்றனர். உங்களுடைய வாழ்க்கையும் முதிர்



ந்த மரத்தின் கனிந்தகனிபோன்று இருக்கட்டும். கனியோ–வாழ்வில் கனிந்த கனியோ–அன்பு எனப்படும். நாம் உண்ணும் கனிகளின் இனிய சுவை நாம் அறிந்ததே. ஆனால், ஈரநெஞ்சமாய வாழ்க்கையாம் விருக்ஷத்தில், அன்பாம் கனிவிளைந்தது என்பதை அநேக மக்கள் உணருவதில்லை. வாழ்க்கையிடையே நேரிடும் துயரங்களெனக் கதிரவனின் கொடுங்கிரணங்களால் அக்கனிகள் நன்கு சோதிக்கப் பட்டவைகள். ஆதலின், சிற்றின்பத்திலுஞ் சீரிய அன்பு எனும் இக்கனி இளகிய மனதில் பிறந்ததே!" என்றார் அவர்.

இஃது ஒரு போதனையல்லவா? ஆம்! பெயர்ச்சொற்கள் யாவற்றினும் கடவுளின் பெயர் "அன்பு". அதைத்தினந்தோறும் நீங்கள் தியானிக்க வேண்டும். மௌனக் குழாத்துடன், கடவுளை - அன்பை அடிக்கடி ஈரநெஞ்சுடன் தியானியுங்கள். அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன ஓர் பைங்கூழ் சிறுகாலை செய்யுங்கள். நாவுக்கரசுப் பெருமான் மனிதர்களைப்பார்த்து இங்கே வாருங்கள்என அழைக்கின்றார். அழைத்து என்னசொல்லுகின்றார்? கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ? என்று கேட்கின்றார். கனி என்ற உடனே நாவெல்லாம் ஊறநின்ற மாந்தர் என்ன கனி என்ன கனி என்று கேட்டதுமல்லாமல் அதைக் கெதியாய்த் தாருங்கள் என அவசரப் படுத்துகின்றார்கள். உடனே அப்பர் ஈசன் எனுங்கனி என்று கூறுகின்றார். அக்கனியை அன்பு நெஞ்சால் பெற்று ஏனையோர்க்கும் வழங்குங்கள்.

## முருகன் வணக்கம்

(சி. இராசரத்தினம்)

முத்திமுதல் நாயகனை முருகத்தேனை
மூவுலகு நிறைந்தெவர்க்கும் தாயொப்பானை
பத்திவழி நின்றுருகிப் பாடியாடி
பரவுவா ரவர்பாதம் பரவாய்நெஞ்சே
எத்திறத்தால் நீயடைவா யிறைவன்பாதம்
இனியுனக்குக் கதிதருவா ராரேயுண்டு
சத்திவடி வேலவனின் தாளேயன்றிச்
சரணெனக்கு வேறில்லை யென்றுவேண்டே.

## விவேக சூடாமணிச் சாரம்

சீடன்:

அறியாமையாகிய நித்திரையிற் கிடந்தேனை ஐயனே! தாங்கள் தங்கள் அருள்நோக்கால் துயிலெழுப்பி, பிறப்பிறப்பாகிய காட்டிலே அளவற்ற இடர்களாலும் அபிமானப் புலியாலும் நலிந்தேனைக் காத்தாட் கொண்டீர்!

வாக்கு மனாதீதனாய், நித்தியனாய்ப் பிரபஞ்சமும் மற்றல்லதுமாய் திரிமூர்த்திகளுமாயிருக்கின்ற கடவுளை வணக்கம்,

குரு:

இந்த உலகத்திலே காணப்படுவன யாவையோ அவை யெல்லாம் பிரமம், களங்கமற்ற உனது மனதின் கண்ணே அக்கண்ணொளியால் பார், புறக்கட் பார்வையில் மனிதர் தம்மைச் சுற்றிப் பார்ப்பனவெல்லாம் ஒவ்வோர் வடிவங்களே யன்றோ? அதுபோல ஞானி எங்கு பார்க்கினும் பிரமத்தையன்றி வேறு காண்கிலன்,

மெய்ப்பொருளான பிரமானந்தத்தை வெறுத்து எவன் அநித்திய உலக இன்பில் நாட்டம் வைப்பான்! தண்ணென்ற நிலவுகாலும் பூரணசந்திரனை விட்டுச் சித்திர சந்திரனை இச்சிப்பாருண்டோ?

உலகவிஷயங்களில் மூழ்கியவன் அவா அறுத்துப் பிறவித்துயர் கடப்பானல்லன், ஆதலின், பிரமதியானஞ் செய்து அதன் இன்பத்தில் என்றும் மூழ்கி யிருப்பாயாக.

நீ வேறு பிரமம் வேறு என்று எண்ணாதே. நீயே பிரமம் என்ற திடசித்தனாகிச் சாந்தநிலை எய்தி, எல்லாம் பிரமத்தின் செயலென எண்ணி யிருப்பாய்,

மெய்யுணர்வு, கைவரப் பெற்ற ஞானி நிற்கினும் கிடப்பினும் எத்தொழிலைச் செய்யினும், ஏதவத்தைப் படினும், நலியாது மௌனத்தேயிருப்பன். அவனுக்கு தேசம், காலம் இயம நியமம் முதலிய ஒன்றுந் தேவையில்லை.



## சத்தியமும் பக்தியும்

(மூ. ச. லட்சுமணபிள்ளை)

சத்தியமே ஜயத்தைத் தரத்தக்கது. சத்தியமே நமக்கு முக்கிய ஆதாரமாய் இருக்கப்பட்டது என்று நினைப்பவர்கள் நிச்சயமாய்க் கடைத்தேறி விடுவார்கள். எல்லாவற்றிலும் சத்தியமே மேலானது. சத்தியத்தைவிட இரட்சிக்கக்கூடியது உலகில் வேறொன்றுமில்லை சத்தியமே பகவத் சொரூபம் சத்திய சொரூபனான பகவான் சத்தியவான்களுக்கே காணப்படுவார். சத்தியத்தின் மதுரத்தை அனுபவிக்க பகவானை பூரண பக்தியுடன் பூசைசெய்ய வேண்டும், பக்தி ஒன்றே மோட்சத்தைக் தரத்தக்கது, ஏகாந்தமான இடத்திற்கு அப்போதைக்கப்போது சென்று ஈசுவர நாமஜெபம் செய்து வரவேண்டும். நாமலிகித ஜெபவேள்வியில் ஈடுபட்டு பக்தியோகம் செய்துவரலாம். தெய்வ பக்தியும் சாதுக்களின் சகவாசமுமே மோட்சத்திற்கு முக்கிய சாதனங்கள்.

மனசுத்தியாய் பகவானை துதிசெய்பவர்களின் மேல் பகவானுக்குக் கருணை பிறக்கும். திடபக்தியையும், தியான நிஷ்டையையும் அருளுமாறு பகவானை வேண்டுங்கள், வேண்டுமளவிற்கு மேலாகவே பகவான் அருள் பிறக்கும் பக்தியினால்மனம் பரிபக்குவமடைந்தவனுக்கு நிச்சயமாக என்றைக்காவது ஒருநாள் பகவான் தன் திவ்ய சொரூபத்தைக் காட்டுவார். திடபக்தி இருந்தால் எவ்விதஆபத்தும் நீங்கிவிடும். பிரபஞ்ச ஆசைகளை எல்லாம் நீக்கி, அவ்வாசைகளை எல்லாம் பகவானிடத்தில் திருப்பவேண்டும், பலனில் அபேட்சை இல்லாமல் பக்தி சிரத்தையுடன் பகவானை சேவிக்கவேண்டும். பகவானை எந்தரூபமாய் நினைக்கின்றோமோ அந்த ரூபமாய் தரிசனம் கொடுப்பார். எல்லாவற்றிலும் பகவான் இருக்கிறார் என்ற நம்பிக்கையுடையவர்களுக்கே நிஜமானபக்தி உண்டாகும். பகவான் நூறு கோடி பெயர்களுடனும், ஆயிரங்கோடி ரூபங்களுடனும் இருக்கின்றார்.

நெருப்பைத்தீண்ட எவ்வளவு பயமோ அவ்வளவுபயம் பாவஞ் செய்வதில் இருக்கவேண்டும். இவ்வாறு இருந்து பொன்.மனைவி,மக்கள் முதலியவைகளின்மேல் எவ்வளவுபிரீதிவைக்கிறோமோ, அதைவிட நூறு மடங்கு பிரீதி பகவானிடம் வைக்க வேண்டும். எல்லா எண்ணங்களையும் விஷம்போல் நினைக்கவேண்டும். நெருப்பானது எல்லாவற்றையும் பஸ்பம் செய்வதுபோல், எண்ணங்களும் ஆசைகளும் மனிதரை பஸ்பம் செய்கின்றன. ஆசை என்னும்வேர், அநேக ஜன்மங்களாய் நம்மைத்தொடர்ந்து கொண்டேவருவதனால், அந்த ஆசைகள் நம்மை ஸம்சாரமென்னும் காட்டின் மத்தியில் கொண்டு வந்து நிறுத்துகின்றன, இக்காட்டில் மனைவியே வலையாகவும், மக்களே சத்துருக்களாயும், தனமே அக்கினி சுவாலையாயுமிருக்கின்றது.

நாம்மோகம் வைத்திருக்கும் இந்த ஜகத்தெல்லாம் சொப்பனம் போன்றதாய் இருக்கின்றது. இத்தேகம் இந்தச்சணமோ அல்லது சற்று நேரத்திலோ. இன்றோ, நாளைக்கோ, என்றோ ஒருநாள் மண்ணாவது நிஜமென்று, பிரதி இமைக் கொட்டும் நேரமும் நினைத்து, ஜாக்கிரதையுடன் பகவத் பக்தியில் ஈடுபடவேண்டியது நமது கடமை. பகவானை தரிசனம் செய்ய வேண்டுமென்று நினைப்பவன் சிரத்தை பக்தி உண்டாவதற்காக அநேககஷ்டங்கள் பட்டே தீரவேண்டும். அநித்தியப் பொருளாகிய முத்தை யடைய ஆசைப்பட்ட மனிதன் தனது பிராணதியாகத்திற்கும் துணிந்து, பயங்கரமான சமுத்திரத்தில் இறங்கும் போது நித்தியமாகிய பகவானையடைய ஏன் கஷ்டப்படக்கூடாது என்பதை சிந்தித்து பகவானையடைய ஆசை கொள்ள வேண்டும்.

## யோகக் கலையின் உயர்வு கண்டேன்

"மாதத்தில் மூன்றுநாள் எனினும், தொல்லை
  மறந்து.தனி யிடத்தினில்.இல் வாழ்வோர், ஆத்ம
சாதனைகள் பயின்றிடுதல் நன்று" என்று
  சற்குருநற் **பரமஹம்ஸர்** மொழிக் கிணங்க,



போதமிகு மூர்த்தி,தலம் தீர்த்த மெல்லாம்
  பொருந்துகதிர் காமத்தில், பொலிந்தி லங்கும்
ஓதரிய **ராமகிருஷ்ண மடத்தில்**, அன்று
  **உள்முகயோ கக்கலை**யின் உயர்வு கண்டேன்!

வாலறிஞர் **சுவாமிசித்ப வானந்தர்** தம்
  மாட்சிமிகு தலைமையின்கீழ், தேர்ச்சி யோடு
நூலொழுங்கு தவறாமல் நிகழ்ச்சி யாவும்
  நுண்ணமைதி தவழ்ந்திட,நன் கமையக்கண்டேன்!
மேல்நாட்டு நாகரிக இருளை விட்டு
  விழிப்படையா ஆண்பெண்கள் தாமும், காலை
நாலுமணிக் கெழுந்தன்றைக் கடன் முடித்து.
  நாமஜெபத் திறகமர்ந்துள் நாடக்கண்டேன்!

மணிநாலுக் கேளழுதல், கடன் முடித்தல்;
  மாணிக்கப் புனலாடல்; வலமாய் வந்து
புனிதால யந்தொழுதல்; மண்ட பத்தில்
  பொங்கமைதிக் கடல்மூழ்கும் தியானம் செய்தல்;
கனிரஸம்போல் நாமத்தைத் திருத்த மாகக்
  கணகணென்ற மணிக்குரலில் தலைவர் சொல்ல,
இனிமையுடன் எல்லோரும் தொடர்ந் திசைக்க
  இன்பத்தேன் இதயத்தில் பொங்கக் கண்டேன்!

அன்புறுதி, நம்பிக்கை, ஆர்வத் தாலே
  அம்மையப்பன் அருள்புகட்டும் **பக்தியோகம்;**
பண்பமைதி யொடுபற்றில் லாது,
  பணிபுரிந்து கடைத்தேற்றும் **கர்மயோகம்;**
நன்கமைந்த அட்டாங்கப் படியி லேற்றி
  நவிலறு சமாதிதரும் **ராஜயோகம்;**
புன்புலால் உடல்,மனம், ஐம் பொறி கடந்த
  பொருள் 'நான்' என் றுணர்த்திடுமெய்ஞ் **ஞானயோகம்!**

இத்தகைய நால்யோக ரகஸ்ய முற்றும்
  இனிமையுடன் தெளிவாக எடுத்தி யம்பி,
பக்தர்கள் தம் சந்தேகக் கேள்விக் கெல்லாம்
  பக்குவமாய்த் தக்கபடி விளக்கம் தந்தார்,
வித்தகராம் சித்பவா னந்த வள்ளல்!
  வீங்குமனச் சுமைகுறைந்து, பாங்காய், இன்பப்
புத்தமைதி நெஞ்சகத்தில் பொலியக் கண்டேன்!
  புகழ்முருகா, என்றும் இதைப் பொருத்து வாய் நீ!

(*பரமஹம்ஸ தாசன்*)

## தொண்டு செய், அன்புகாட்டு, கொடு,

கீழ்த்தரமான வேலை, மதிப்பான வேலை என்று வேற்றுமை பாராட்டாதே. எவராயினும் தன் தேகத்தில் எங்காவது ஓரிடத்தில் வலியால் துடித்துக் கொண்டிருந்தால், மெதுவாக அந்த இடத்தைத் தடவிக்கொடு, அந் நோயாளியின் உள்ளத்தே குடி கொண்டுள்ள இறைவனுக்கே தொண்டுபுரிவதாக எண்ணிக் கொள். உன் இஷ்ட மந்திரத்தை ஜபி. பாதையோரத்தில் மனிதனோ, பிராணியோ இரத்தக்காயத்தால் துன்புறுவதைக் கண்டால் உன்மேல் வஸ்திரத்தைக் கிழித்து காயத்தைக்கட்டு. புகையிரத நிலையத்தில் ஏழைச் சுமைதாக்கியுடன் சண்டையிடாதே. தாராளமாகவேயிரு. எப்பொழுதும் உன்கையில் சிறிது பணம் வைத்துக்கொண்டு, அதை ஏழைகளுக்கும், அங்கஹீனர்களுக்குங் கொடு.

உன்னுடைய சித்தம் சுத்தியடையும்போது, மனம் தானாகவே இறைவன் பால் செல்லுகிறது, எனவே தூய்மையான அன்பு, தெய்வ சரணாகதி, தெய்வ வழிபாடு, இவற்றினால் இறைவனிடம் ஐக்கியமாவாய்.

## எப்போதும் முகமலர்ந்திரு

முகமலர்ந்திரு, சந்தோஷமாக இரு. வருத்தம், முக வாட்டம் இவற்றை விட்டுவிடு. உற்சாகக் குறைவு, உண்மையில் ஒருதொற்றுநோய். ஆத்மவிசாரணை, தெய்வீகப்பாடல்களைப்பாடுதல் பிரார்த்தனை, பிராணாயாமம், திறந்த வெளியில் நடத்தல், சந்தோஷத்தைப் பற்றிய நினைவு இவற்றால் அவைகளை விரட்டு.

பிறருடைய நன்மைக்காகவே ஜீவி. எல்லாம் ஒளிமயமாகவும் ஆனந்தமயமாகவும் இருப்பதாகவே நினை. பிறபொருள்களைப் பார்ப்பதற்கு மனதை அனுமதியாதே, மனதின் சிதறிய சிந்தனைகளையெல்லாம் திரட்டு. கவனிக்கும் சக்தியை விருத்திசெய். உற்சாகமளிக்காத பொருள்கள், எண்ணங்கள். இவற்றில் உற்சாகம் காட்டு, மனதின் எத்தனையோ குறைபாடுகள் மறைந்துவிடும். மனம் மேலும் மேலும் பலம் பெறும்.

ஸ்ரீ சுவாமிசிவானந்தா.





## ஸ்ரீ கேதார் பத்திரியாத்திரை.

### கௌரிகுண்டம்.

கௌரிகுண்டம்:- இங்கு ஒரு வெந்நீர் ஊற்று உண்டு. இவ்வெந்நீர் திருகோண மலையிலுள்ள வெந்நீர் ஊற்றிலும் பார்க்க வெப்பம் கூடியது. அதில் ஸ்நானம்செய்து பழகியவர்கள் தண்ணீரில் ஸ்னானம்செய்வது போலவே ஸ்னானம் செய்வர். எங்களால் தண்ணீர் கலவாமல் ஸ்னானம் செய்ய முடியவில்லை. அந்த இடத்திலே அந்த வெந்நீர் ஊற்று இருப்பது இறைவியின் கருணை என்றேகூற வேண்டும். பக்கத்திலே மந்தாகினி பேரிரைச்சலிட்டுக் கொண்டு பாய்கின்றது. மந்தாகினியில் கையை வைத்துவிட்டால் அந்த விறைப்பு மாற ஒரு மணித்தியாலம் செல்லும், விரல்கள் தலைவணங்காமல் நிமிர்ந்துநிற்கும்; உணர்ச்சி கிடையாது. இந்தத்தன்மையில் மந்தாகினியில் ஸ்னானம்செய்வதென்றால் எப்படி முடியும்? அந்த வெந்நீரில் ஸ்னானம் செய்த உடனே இதுவரைசெய்த பிரயாண அலுப்பு பகலவனைக்கண்ட பனிபோல் நீங்கிவிட்டது. புதிய உற்சாகம் பிறந்து விட்டது. இலங்கையிலிருந்து புறப்பட்ட புதிய மனிதரானோம். அங்கு ஒரு கௌரியம்மன் கோயில் உளது. அம்பிகையின் மூக்கில் ஒரு வளையம் தொங்குகிறது. அங்குள்ள மக்களின் நாகரீகத்தையே அது காட்டுகிறது. கேதார் நாத அப்பனிடம் போகும் பக்தர்களுக்கு அன்னை ஆறுதலளித்து அனுப்புகின்றார். தாய்எப்போதும் கருணையில் கூடியவளல்லவா?

கௌரிகுண்டத்திலிருந்து கேதார்நாத் இன்னும் 7 மைல்தூரம் மாத்திரந்தான் இருக்கிறது. 7 மைல் தூரமும் நல்ல ஏற்றம். கேதார்நாத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்திற்கு இப்பால் ஏற்றம்மரத்தில் ஏறுவது போன்ற செங்குத்தாயுள்ளது. வழிநெடுக அருமையான அழகுமிக்க காட்சிகளைக் காணலாம். மந்தாகினி இரைச்ச லிட்டுக்

கொண்டும் பெரியகற்களைத் துளைத்துக்கொண்டும் ஓடுவதைக்காணலாம், தண்ணீர் கீழே ஓடுகின்றது; ஆற்றுக்கு மேலாக மதகுபோல உறைபனி உறைந்து கிடக்கின்றது, இவ்விடத்திலேதான் முதன்முதல் உறைபனியின் அனுபவம் கிடைத்தது. நாங்கள் நடந்து செல்லும் பாதையிலேயே உறைபனிகள் இடையிடையே உறைந்து கிடந்தன. உறைபனியைக் கையினால் அள்ளலாம் வெள்ளைச் சீனி போல் சொருசொரு என்று இருக்கும். கையில் அள்ளி இறுகப் பிடித்தால் பனிக்கட்டியாகிவிடும். உறைபனியின் மீது நடக்கும் போதுதான் சப்பாத்தின் உபயோகமும் தடியின் உபயோகமும் தெரிகிறது. உயரமான இடங்களில் ஏறும்போது தடி உதவியாக இருந்தாலும் உறைபனியில் நடக்கும்போதுதான் அதன் உண்மையான பயன் விளங்குகிறது. கேதார்நாத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்திற்கு இப்பால் இருந்தே உறைபனி தொடர்பாயுண்டு. இந்த ஒன்றரை மைல்தூரமும் உறைபனியின் மீதே நடந்தோம், யாத்திரிகர் கஷ்டமில்லாமல் செல்லக் கூடிய வகையில் உறைபனி மீது படிகள் வெட்டியிருந்தார்கள், நாங்கள் உறைபனிமீது நடந்து செல்லும்போது சுமார் ஒன்றரை மணியிருக்கும், உறைபனியின் நடுவே நின்று நான்கு பக்கமும் நோக்கினோம். அது திருப்பாற்கடல்போல் காட்சிதந்தது. திருப்பாற்கடல் எப்படியிருக்கும் என்பதை இதைக்கொண்டே கற்பனை செய்து பார்த்தோம், நாங்கள் செல்லும் போது யாத்திரிகர்கள் தரிசனை பெற்றுத்திரும்புகிறார்கள். எத்தனையோ பாஷை வேறுபாடுடைய மக்களைப்பார்க்கிறோம், அவர்கள்எல்லோரும் கேதார்நாதனிடம் ஒரு ஒற்றுமையைக் காண்கிறார்கள், எதிரே வரும் யாத்திரிகர்கள் "கேதாரநாதனுக்கு ஜே" சொல்லுகிறார்கள். நாங்களும் அதையே திருப்பிச் சொல்கிறோம். வழிநடந்த அலுப்பு சிறிதுநீங்கிவிடுகிறது, கேதார்நாதனைக் காணும் ஆவல் மீதூர புதுஉற்சாகத்துடன் நெருங்கிச் செல்கிறோம்.

## கேதார்நாத்

எவ்வளவோ அழகிய காட்சிகளைக் கண்டு களிப்புற்று மெய்ம்மறந்து நின்றாலும் உள்ளூரக் கேதார்நாதனை எப்போ தரிசிப்போம் என்னும் உள்ளத்துடிப்பு இருந்து கொண்டேஇருந்தது. அந்தத்துடிப்பில் உறைபனியின் குளிரே தெரியவில்லை, சமீபத்தில் நாலைந்து குடிசைகள் தென்பட்டன, அவற்றின் கூரைகளிலெல்லாம் பத்து பன்னிரண்டுஅடி உயரத்திற்கு உறைபனி உயர்ந்திருந்தது, அதோகேதார்நாதனுக்கு ஜே என்று ஒரு குரல் எழுந்தது. கேதார்நாதனின் கோபுரம் உறைபனி மலைகளுக்கு நடுவே மலர்ந்த வெண்டாமரை மலரின்நடுவே அமைந்த தாமரைப் பொட்டுப் போல் காட்சியளிக்கிறது கோபுரம். மந்தாகினி மலைப்பக்கமாக உறைபனியினூடே பாய்வது கங்கை சிவனுடைய சடையிலிருந்து விழுவதுபோலக் காட்சி யளிக்கிறது. நாங்கள் ஐம்பது யார் தூரத்திலிருந்து கொண்டே கோபுர தரிசனை செய்து ஒரு பண்டாவின் குடிசையில் நுழைந்தோம். அவர் மேல்மாடியில் எங்களுக்கு ஓரறை ஒதுக்கித்தந்தார். அவர் எங்கள் மூவருக்கும் மூன்று மெத்தைகள் கொண்டு வந்து தந்தார். மேலே சென்று நடந்து வந்த உடம்புச் சூடு சிறிது ஆறியதும் தான் குளிரினுடைய தன்மை உடம்பில் தெரியத் தொடங்கியது. மெத்தையைக் கண்டதும் குளிர் இன்னும் கூடுவதுபோலத்தெரிந்தது. அதற்கிடையில் பண்டா எங்களுக்கு சூடான பானம் கொண்டுவந்து தந்தார் அந்தநேரத்திலே அவர்தந்தபானத்திற்கு நாங்கள் என்னவிலை கொடுதாலும் தகும். அவ்வளவு சுகத்தைக் கொடுத்தது அந்த நேரத்திலே அந்தப்பானம்.



பானத்தைக்குடித்து விட்டு மெத்தையை விரித்து மெத்தைக்குமேல் விழுந்தோம், பண்டா இதைப்பார்த்தார், அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது; இங்கு இப்படிப் படுப்பதில்லை என்றார், மெத்தைக்குள் புகுந்து படுக்க வேண்டு மென்றார். அதைக்கேட்ட எங்களுக்குச்சிரிப்பு வந்துவிட்டது. உடம்பிலே நாலு சட்டைகளை மூடி அதன்மேல் இருகம்பளிகளைப் போர்த்து மெத்தைக்குள் புகுந்து படுத்தும் அன்றிரவு நித்திரை இல்லையே யென்றால் கேதார்நாத்தின் குளிரை வேறுஎப்படித்தான் விளக்கமுடியும்?

இதற்கிடையில் எங்களுடன்வந்த வழிகாட்டி, தான் தனியாகச் சென்று சுவாமி தரிசனஞ் செய்துவிட்டு வந்து, பின்பு படுக்கலாம், உடனே சென்று சுவாமி தரிசனம் செய்து வாருங்கள் என்று எங்களை ஊக்கப்படுத்தினார். அப்பொழுதான் எங்கள் வழிகாட்டியின் வைராக்கியத்தையும் எங்கள்சோம்பல் தனத்தையும் உணர்ந்தோம். உடனே நாங்கள் எங்களை அந்தமெத்தையிலிருந்து விடுவித்துக்கொ

ண்டு கேதார் நாதனைத் தரிசிக்கச் சென்றோம்.

கேதார்நாத்தைப் பற்றிப் பரம்பரைக் கதை ஒன்று வழங்குகின்றது. மகாபாரத யுத்தத்திற்குப் பிறகு தருமர் 36 வருடங்கள் அரசுபுரிந்தார். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா இவ்வுலகு நீத்த செய்தியை பாண்டவர் கேள்வியுற்றனர். துயரம்தாங்கமாட்டாதவர்களாய்த்தேகத்தைத்தியாகம்செய்யத் துணிந்தனர். அர்ச்சுனனுடையபேரனை பரீக்ஷித்திற்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு பஞ்சபாண்டவர்கள் திரௌபதியுடன் வடக்கே கடசியாத்திரை செய்தனர். கேதார்நாத் மூலந்தான் பாண்டவர்கள் சென்றார்களாம். அந்தக் காலத்திலே இவைகள் எல்லாம் மிருகங்கள்நிறைந்த பெரியகாடுகள். இவ்வழியாகச் சென்ற பாண்டவர்களைச் சிவபெருமான் பலவாறு சோதனை செய்தாராம். அங்குமிங்குந் தோன்றி மறைந்தார்; கடசியாகத் தோன்றி ஒரு கல்லாக அமைந்தாரம். வீமன் இதைக்கண்டு கோபமுற்று அக்கல்லைப் பிளந்தெறியத் தன் கதாயுதத்தை ஓங்கினான். சிவமெருமான் உடனே அவர்களுக்குக் காட்சிதந்து அக்கல்லை மூர்த்தியாக வணங்கும்படி உபதேசித்தார் பாண்டவர்களே அதற்குமுதல் பூஜைசெய்தவர்கள் என்று சொல்லப் படுகிறது. அதுவே இப்பொழுது கேதார்நாத் மூர்த்தியாக விளங்குகிறதாம்.

கேதார்நாத் கோயில் நிர்வாகம் சங்கராச்சாரியார் மடத்தின் கீழே உள்ளது. சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு ஆதி சங்கராச்சாரியார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கேதார்நாத்தில் ஒரு கோயிலைப் பிரதிஷ்டை செய்தார். அதே கோயில் தான் கேதார்நாத் கோயிலாகும். கோபுரம் ஆதிசங்கராச்சாரியார் கட்டுவித்தது; சிவலிங்கம் பாண்டவர்கள் பூஜித்தது. இவை இரண்டும் சேர்ந்தே இன்று கேதார்நாத் கோயிலாக விளங்குகின்றது.

இங்கு நாள் தோறும் மூன்று பிரதான பூஜைகள் நடை பெறுகின்றன. அதிகாலை 4 மணிக்கு அந்தஊரவர்களுடைய பூஜையாகும். காலை 8 மணி தொடக்கம் மாலை 2 மணிவரை யாத்திரிகர்களுடைய பூஜையாகும் மாலை 4 மணிக்கு தேவபூஜையாகும். காலை 4 மணிக்கு நடைபெறும் பூஜைக்கு ஆவ்வூரவர்களே அனுமதிக்கப் பெறுவர் யாத்திரிகர் பூஜை நேரத்தில் எவர்களும் தங்கள் இஷ்டப்படி



ஆண்டவனைத் தரிசனை செய்யலாம். ஒவ்வொருவரும் தாம் தாமே அபிஷேக ஆராதனையெல்லாம் செய்யலாம், கங்கைநீர் எடுத்து அபிஷேகம் செய்யும் பாக்கியமும் சிவபுராணஞ்சொல்லி அர்ச்சனைசெய்யும் பாக்கியமும் எங்களுக்குக்கிடைத்தது. யாத்திரையின் பலன்அதுவே என்று மனம்மிகமகிழ்ந்தோம். தாம்வணங்கும் தெய்வத்தை தாமேநேரில் அர்ச்சனைசெய்வதால் உண்டாகும் மாபெரும் ஆனந்தத்தைஅங்குச் செல்லும் அடியார்கள் யாவருமே அடைகிறார்கள்

தேவபூஜை நடைபெறும்போது பூசகரைத்தவிர வேறு எவருமே கோயிலினுள் அனுமதிக்கப்படுவதில்லை, அந்நேரத்தில் தேவர்கள் எல்லாம் எம்பெருமானைத் தரிசிக்க வருவதாக ஐதீகம்.

உலகத்தில் பெரிய லிங்கம் இதுவே, இதைக்காணும் போது முன்பு எப்பொழுதோநாம் கண்டுதரிசித்தது போன்றவோர் எண்ணம் மனதில்உண்டாகிறது. தனிமையில்இருந்துதியானிக்கும்போது ஜோதிவடிவமாகத் திகழ்கிறது, மௌனத்தை உபதேசியாமல் உபதேசித்துக் கொண்டிருக்கிறது, லிங்கத்தின்வெளித்தோற்றம் கரடுமுரடாகஅழுந்தமின்றியே காணப்படுகின்றது, இருந்தும் பல வேறுபட்ட மக்களையெல்லாம் ஆன்மீக ஒருமைப்பாட்டுடன் கூட்டிவைக்கும் சக்தி அப்பெருமானிடத்து உண்டு.

கேதார்நாத்தில் பட்டணங்களுக்குரிய வசதிகள் எதுவும்கிடையா, எனினும் அந்தஇடத்தில்விளங்கும் ஆத்மீகஅலை, சாந்தம், தெய்வீகம் என்பன ஒருவர் மனத்தைப் பேரானந்தமடையச் செய்து உன்னத நிலையடையச் செய்கிறது. இதற்கு ஈடும் இணையுமில்லை. சாதகர்களுக்கேற்ற அமைதியான இடம், இரவும் பகலும் ஒரே அமைதி; நாங்கள் தங்கிய இரவு அமாவாசைத் தினமாகும். ஆனால் இரவு முழுவதும் பூரணைத்தினம்போன்று ஒரேவெளிச்சமாகவேஇருந்தது. காரணம் உறைபனியின்வெண்மைத்தன்மையே. தூந்திரப்பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு ஆறு மாதம் சூரியன் தெரிவதில்லை, என்று படித்துள்ளோம். அவர்கள் ஆறு மாதகாலமும் அமாவாசை போன்ற இருட்டிலேதான் வாழ்வார்கள், என்று நினைத்திருந்த காலமொன்று உண்டு. பனிப்பிரதேசங்களில் எல்லாம் பனியின் ஒளியால் நிலாக்காலம்போலவே வெளிச்சம் உண்டு என்னும் உண்மை யனுபவத்தை அன்றுதான் அறிந்தோம்.

# வாழ்வின் லட்சியம் இறைவனைக் காண்பதே

(சைவப் பாதிரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை)

புனித அன்னை சாரதாமணி தேவியார், ஸ்ரீராமகிருஷ்ணராகத் தோன்றியிருப்பவர் ஆண்டவனே, என்று கண்டு கூறினர். "நீங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தந்தை எனக் கருதமுடியுமா?" என்று ஒருவர் கேட்டபோது, நம்அன்னையார், "ஆம். அவர் என்தந்தையாரும் தாயாரும் உடன்பிறந்தாரும் நண்பரும்ஆவார், எனக்கு எல்லாம் அவரே" என்னும் அருமைவாய்ந்த விடையை அளித்தார். அப்பர் பெருமான் ஆண்டவனை நோக்கி, "அப்பன் நீ அம்மைநீ அன்புடையமாமனும்மாமியும் நீ! ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ!" எனவரும் திருத்தாண்டக மொன்றுபாடியிருப்பது அன்பர் சிலர் நினைவிற்கு வரலாம். தாமும் சாரதாதேவியாரும் ஒருவரே என்பதாகப் பரமஹம்சரே ஒருமுறை கூறியுள்ளார், அவரை அர்த்தநாரீசுவரர் போலக் கருதுதல் பொருத்தமுடையதே. இப்பெரு நிலையில் சிறக்க மாட்டாத இல்லற வாசிகளும், கணவனிலும் மனைவியிலும் கடவுள் இருப்பை உணர்ந்து, அன்பும் பணிவும் தூய்மையும் உடையராய் வாழ முயலுதல் கடன், "தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்று பொதுமறை, கற்புடைய மங்கையர் கருத்தறிந்து உரைப்பதும், யாக்ஞவல்கிய முனிவர், கணவர் மனைவியன்புக்கு அடிப்படைக் காரணம் அவருள் இருக்கும் பரம்பொருளின் இருப்பே என்று உபதேசித்ததும் இங்கு நினைவு கூரற்பாலன, அன்னையாரும், "வாழ்வின் லட்சியம் இறைவனைக் காண்பதும் அவன் நிலையில் மூழ்கிக் கிடப்பதுமேயாம்," என்று அருளிச் செய்துள்ளார்,

புனித அன்னையார் தட்சிணேசுவரத்தில் நடத்திய ஞான இல்லறத்தில் விளங்கிய பண்புகளிற் பல, சதாரண இல்லற நங்கையரும் இயன்ற அளவில் கைக்கொள்ளற் குரியன, அன்னையார் அடக்கம் பெரிதும் உடையவர், நவநாகரீகப்புயற்காற்று இந்தியப்பெண்களின் அடக்கம் அலக்கண் உறாமல் அதைப்பாதுகாத்தல் நலம். கணவன் ஓர்கால் நெறி திறம்பினும் மங்கையர்க்கரசியார் போல கற்புநெறி கடவாது அன்பறிவு மாட்சியால் அவனைத் திருத்திமகிழும் கடமை உணர்ச்சி பெண்மணிகட்குப் பெருமை தரும். அன்னையார் இரக்க சுபாவம் அங்ஙனமே பின்பற்றத்தகுந்தது. சாதிமத பேதமின்றியும் உயர்திணை அஃறிணைப் பேதமின்றியும் உயிர்கள் மாட்டு அவர் இரக்கம் காட்டினர். கணவனர் தவ வாழ்க்கைக்குப் பணிவிடை புரிவதிலும் அவரைத்தரிசிக்க விரும்பி வரும் அன்பர்கட்கு உணவருத்துதலிலும் அம்மையார் சலிப்பின்றி நாள்தோறும் பெரிதும் உழைத்து வந்தார். இதனாலேயே வைகறைத் துயிலெழுந்து, தியானம், ஜபம், பூசனை. இவற்றையும் பலமணிநேரம் சீலத்தோடு செய்து வந்தார், வீட்டுக் கடமைகளைச் செய்யும் போதும் அவர்நாவும் கருத்தும்தெய்வ சம்பந்தம் உடையனவாகவே இருந்தன. தாம் தொழும் தெய்வமாகிய கணவனர் திருவுருக்கரந்த பின்புஅன்னையார் 34 ஆண்டுகாலம் மண்ணுலகில் தங்கியிருந்த காலத்தும் இந்நிலையே இருந்து இடைவிடாச் சேவை புரிந்து வந்தார்.



தாம் பெருது பெற்ற பிள்ளைகளாகிய சீடப் புதல்வர் புதல்வியர்பால் அம்மையார் காட்டி வந்த உளமார்ந்த அன்பு; உத்தம அன்னையிடத்துத்தான் காணக்கிடைப்பது, இத்தகைய ஞானப்புதல்வியருள் ஒருவராகிய நிவேதிதா நம் அன்னையாரைப் பற்றிக் கூறியிருப்பது நம் உள்ளத்தை உருக்கவல்லது. அது பின்வருமாறு :- "அன்புள்ள அன்னையே! நீங்கள்அன்பு நிறைந்தவர்கள், உங்கள் அன்பு சாந்தமயமானது. எல்லோருக்கும் நலத்தையேதருவது. அது விளையாடும் நீர்மை நிறைந்த பொன்மயமான ஒளியே. உண்மையில்தாங்கள் கடவுளின் வியக்கத்தக்க படைப்பே! உலகிற்கென ஸ்ரீராமகிருஷ்ணர் பெய்தளித்த அன்புப்பிரசாதக் கிண்ணமே. அன்றும்இன்றும் உங்கள் நினைவு, விருப்பு வெறுப்பற்ற காந்தம் அல்லவா? தாமரை அிலை மீது உள்ள பனித்துளிபோல, உலகினைத் தீண்டாது இறைவனிடத்தே உதவும் இனிய ஆசிமொழியன்றோ அது?"

சுவாமி விவேகானந்தர் முதலியசீடர்கள் அன்னையாரைக் குருதேவர் எனவேகொண்டு, மனங்கலங்கியகாலத்து அவர்கள்தேறுதல் அடைந்தனர். அவர்கள் தொடங்கிய எல்லாத் தொண்டுகளையும் அன்னையார் அறிவுரையும் ஆசியும் பெற்றே தொடங்கினர்கள். பலநா

டுகளில் இப்போது இந்துமத ஒளி வீசும் சபைகளும் மடங்களும் இருப்பதும் புனித அன்னையார் ஆசியின் பயனே ஆகும்.

இவ்வாறு ஸ்ரீ சாரதா தேவியார் பெண்மைக்கு ஓர் இலக்கியமாகத் திகழ்கின்றார். பாரதநாட்டுப் பண்பாகிய தெய்வீக நாகரீகத்தின் படிவமாக உள்ளார். இந்தத் தலைமுறையிலும், இனிமேலும், பெண்கள் பெண்மை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது நமக்குக்கிடைக்கும்படிப்பினை. "பெண்மையாவது யாது? அடக்கம் பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த தொன்று பெண்மை எனப்படும்" இப்பெண்மை என்றும் வாழ்வதாக! "Without Sakthi (power) there is no regeneration for the world. Mother has been born to revive that wonderfull Sakthi in India, and making her the nuctes, once more will Gargis and Maitreyis be born in to the world" என்று அன்னையார் ஞானப் புதல்வர் சுவாமிவிவேகானந்தர் அன்று ஆர்வத்துடன் கூறினார், அந்தத்தீர்க்கதரிசியின் திருவாக்குப் பலிக்கவேண்டும்; ஆண்டவன் அருளால் பலித்தே தீரும். ஆண்டவனைத் தந்தை என்று மட்டும் கருதுதல் சாலாது. அவன் அன்னையினும் தயவுடையான் என்றும் கருதவேண்டும். அவன், 'பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்' பரிவுடையவன். அவன் 'தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்' என்று நம் ஆன்றோர் உணர்த்தியுள்ளனர். இத்தகைய தாய்மையுடையவன் இறைவன் என்னும் உண்மையர்னது புனித அன்னை சாரதாமணி தேவியார் வாழ்க்கையிற் புலனாகின்றது.

தூய அன்னையாரும் விவேகானந்தரும் எண்ணியபடியே இந்துப் பெண்மணிகள் துறவு நிலை நின்று ஞான சாதனப் பழக்கமும் சமுகசேவையும் செய்தற்காகப் பெண்கள் தவச்சாலைகள் அமைக்க இராமகிருஷ்ண மடத்துப் பெரியோர்கள் எண்ணியிருப்பதுபெரிதும் போற்றத் தக்கதே, நாட்டின் பலபகுதிகளிலும் இத்தகைய தபோவனங்கள் ஏற்பட்டு ஞானமும் தியாகசேவையும் நாடெங்கும் பரவ அம்மையப்பர் அருள்புரிவாராக! ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் அவர் சகதர்மசாரிணியாரும் ஆசீர்வதிப்பார்களாக! (கலைமகள்)



# காலமும் குறிக்கோளும்

**ரா. வரதநாராயணன்**

வாழ்க்கை என்பதே காலத்தால் ஆனது. காலத்தின் வேகமோ தடை செய்ய முடியாதது. மனிதன் தன் அறிவாற்றல் மிகுதியால் மற்றவர் வியக்கும் அற்புதசாதனங்களையும் உண்மைகளையும் வெளியிட்டிருக்கிறான், ஆனால் காலத்தை மட்டும் அவனால் வெல்ல முடியவில்லை, முடியவும் முடியாது. இதுவரை சென்று விட்ட காலவேறுபாட்டின் வேகத்திலே மனிதன் சிக்கிச் சீரழிந்தும் சீர்பெற்றும் உழன்றும் திரிந்தும் மடிந்தான், மடிந்து விட்ட சிலர் வாழ்க்கை, சிலத்துடன் –குறிக்கோளுடன் இருந்தால், சுழன்று ஓடும்காலத்துடன் இணைந்து, அவர்கள் மடிந்தாலும் அவர் புகழை மனிதபரம்பரை ஏத்தி பணிந்து போற்றும் அளவில் நிற்கிறது. காலத்தின் அருமையை உணர்ந்து தகுந்த குறிக்கோளுடன் வாழ்வை நடத்துவதுதான் பகுத்தறிவின் பயனாகும்.

உயிர் உள்ள எந்த பிராணிவர்க்கமும் வாழத்தான் விரும்பும் இது இயற்கையே. ஆனால் மனிதன் வாழ விரும்புவதில் தான் சிறப்பு இருக்கிறது. இன்று மனிதன் இவ்வளவு உன்னத நிலைக்குஉயர்ந்த காரணம், அவ்வப்பொழுது அவன் அமைத்துக் கொண்ட குறிக்கோள்தான். மனிதனின் வளரும் அறிவு குறிக்கோளைத்தன் வாழ்வில்அமைத்திராவிட்டால், அரிசி தின்னும் பிராணியாகவே இருந்திருப்பான்.

எனவே, வாழ்வு வளம் பெற, நாகரீகம் வளர்ந்து மனித இனம் சிறந்து விளங்க, குறிக்கோள் அவசியம்என்பதை உணர்ந்து தங்கள் வாழ்விலே அதைக் கொண்டு, தங்களால் நாட்டையும் உயர்ந்திட செய்தமகான்கள் எந்த நாட்டிலும் இருந்திருக்கிறார்கள். அப்படி உயர்ந்தவர்களின் வரிசைகளிலே "காந்தி" யடிகளின் திருநாமம் கடைசியாகும்.

அவர் “அஹிம்ஸை” என்ற குறிக்கோளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்ததையும், “உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்” என்ற வள்ளுவனாரின் தெள்ளமுத மொழிக்கு இலக்கியமாகத் திகழ்வதையும் நாம் நேரில் கண்டோமல்லவா? குறிக்கோள் மனிதனை உயர்த்துவதோடு மட்டும் நின்று விடுவதில்லை; மிருகத்திற்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாட்டை அடிக்கடி பிரித்துக்காட்டுகிறது.

இங்கு, தன் குறுகிய வாழ்நாளில், விரிந்து பரந்து கிடக்கும் காலவானிலே என்றும் பறந்துதிரியும் குயிலாகத்தன்னைச் செய்துகொண்ட அமரகவியின் பாடல் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும்,

“காளி! குறிக்கோள் இல்லாது, காலத்தின் தன்மையையும் உணராது, உணவு தேடி உண்டும் உறங்கியும் பல வம்பு பேசியும் துயர் உழந்தும் பிறரைவருத்தியும் காலத்தைக்கழித்து, நரைகூடிக்கிழவனாகி, கொடுமை செய்யும் காலனுக்கு இரையாகி மடிந்து விடுகின்ற “வேடிக்கை மனிதர்கள்” பலர் வாழ்ந்து செல்கின்றார்களே, அவர்கள் கூட்டத்திலே நான் பிறந்தது உண்மையானாலும், நான் அந்த “வேடிக்கை இனம்” போலவே கழித்து விடமாட்டேன். எனக்குத் தனியான குறிக்கோள் உண்டு. நான் அதன் மூலம் காலத்தோடு இணைந்தவன், என்றபொருள்படப் பாடியுள்ளகவிதை என்றும் நம் இதய கீதமாக ஒலித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

“தேடிச்சோறு நிதம் தின்று-பல
சின்னஞ்சிறு கதைகள்பேசி -மனம்
வாடித்துன்ப மிக வுழன்று -பிறர்
வாடப்பல செயல்கள் செய்து -நரை
கூடிக்கிழப் பருவமெய்தி -கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின்மாயும்-பல
வேடிக்கை மனிதரைப் போலே -நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ? என்று கூறுகின்றார்.

சோர்ந்த உள்ளத்திற்கும் சுவை யூட்டும் உணர்ச்சிப்பாடல்!

பாரதியார் வீணே வீழ்ந்துவிடவில்லை. காலத்தைக் குறிக்கோள்



## யாரறிவார்?

அன்புத்திரு. நண்பர் Mr. W. D. N. Mellis (Scortland) இன் அன்பின் பெருக்கால் உதவி பெற்று, சத்குரு சுவாமி ராமதாஸின் அருள் பெற்றுக்காஞ்சங்காடு ஆனந்தாச்சிரமத்திற்கு பயணம் ஆனேன். ஆங்கு சத்குருவின் திவ்யகடாட்சம் பெற்றுச்சிறிது நாள் அவன் நிழலடியில் கிடந்தேன். அந்தச் சோதி வடிவத்தின் முன் என் இருண்ட மனம் உருண்டோடியது. அவன் அருள், என் இருள் அடைந்த மனத்திற்கு ஓர் கலங்கரை விளக்கென ஏன் பூரண நிலவெனப் பிரகாசித்து என் உள்ளத்தைப் பரிசுத்த மாக்கிற்று.

---

முற்பக்கத்தொடர்ச்சி

வாழ்க்கையால் வென்ற கவியரசாக- மக்களின் உள்ளத்திலே ஒளி வீசும் மங்கள ஜோதியாக – நிலைத்து விட்டார்.

குறிக்கோள் இல்லாத வாழ்வு வெறும் சூன்ய வெளிபோன்றது. சுவை இல்லாமல் வெறுப்பை விளைவித்துத் தற்கொலை வரையிலும் கொண்டு விட்டுவிடும்.

மனிதன் வாழ்நாளின் ஒவ்வொரு கணமும் மயானத்திற்குத்தன் உடலை அனுப்பி விட யாத்திரை செய்து கொண்டே இருக்கிறான், நெடுநாள் வாழ வரம் பெற்று யாரும் வரவில்லை, “நேற்றுச்சாயங்காலை நானும் என் நண்பனும் மறுதினம் ஒரு வேலையாக வெளியூர் செல்லுவது என்ற முடிவுடன் பிரிந்தோம். அவன் வீடுசென்று தலைவலி என்று படுத்தானாம்; வாந்தி இருதடவை எடுத்தானாம்; மருத்துவரை அழைத்து வரு முன்னே மரித்து விட்டானாம்; என்ன வாழ்வு பாருங்கள் ஐயா! என்று மரணத்தின் வியப்புடன் பேசுவதைக் கேட்கிறோம்; பார்க்கிறோம். ஆனால் உணர்கிறோமில்லை. உயர்வாக வாழ மனித உடல் ஒரு அருமையான வாய்ப்பு. சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் கருமத்தில் கண்ணாக இருக்கவேண்டாமா? காலத்தை வென்ற குறிக்கோளதில் தான் மனித சமுகம் உயர்ந்திருக்கிறது,“உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே” என்றல்லவா கூறுகிறது தமிழ்நூறன்.

அரபிக் கடலின் சுகந்த காற்றும், அந்த மலைவளமும், ஆச்ரமத்தின் வளமும் என்னை ஓர் புதிய மனிதனாகவே ஆக்கிற்று. ஆங்கு வாழ்ந்து வரும் சகோதர சகோதரிகளின் அன்பு என்னை மிகவும் ஆகர்ஷித்தது. மொழி தெரியாவிட்டாலும் அன்பாலே ஆங்குள்ளோரிடம் பழகினேன். என்னுள்ளே அகண்ட ஜோதியாகச் சுடர்விட்டு தன் தேஜஸ்ஸை அள்ளி வீசிக்கொண்டு, அவன் என்னைக்காத்தான். 'பாபா'- இது சுவாமிகளை அன்போடு அழைக்கும் அடியார்களின் வார்த்தை. நானும்நாளடைவில் சுவாமிகளை 'பாபா' என்றே அழைத்தேன். பாபாவின் காலைப்பிடிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவன் காலை தொட்டதுதான், உடனே என்னுள்ளே ஓர் ஒளி புகுந்து என்னைப்பரிசுத்தனாக்கியதோடு மட்டுமின்றி. என்கவிதா தேவியைத் தட்டி எழுப்பிற்று. அமாவாசை, அன்னையின் பிறந்தினவிழா. ஆம். அகிலத்திற்கும் அன்னைதான் அந்த 'மாதாஜீ'. இது அன்னையை அன்போடு அறைகூவி அழைக்கும் அபலைகளின் இதய நாதம். அதற்கு மறுநாள் ஆச்ரம வாயிலிலே வழக்கம் போல 'பாபா' சாய்வுநாற்காலியில் உட்கார்ந்திருக்க, இரண்டொருஅடியார்கள்மட்டும் உட்கார்ந்து மாலைக்கதிரவனின் வர்ணஜாலங்களிலே மயங்கிக்கிடந்தனர், அந்த மலைநாட்டையே தன் மாயாஜாலங்களால் ஆகர்ஷித்துக் கொண்டிருந்தான் அந்த மறையப் போகும் கதிரோன், இன்னும் சற்று நேரத்திலே –ஆழ்கடலிலே– மூழ்கப்போகும் அவன் லீலையைக் காணத்தான் எவ்வளவு அழகு! ரம்மியம்!!

மொழிதெரியாக்குறையால் 'பாபா' தலையை ஆட்டியவண்ணமிருந்தார். காண்போர் ஏனடா இவன் தெரியாமொழிகளிலே எதையோ படிக்கிறானேஎன்று என்னை ஒருவிதமாகப்பார்த்தனர். ஆனால் நானோ, இல்லை–என்பரிசுத்தமான ஆன்மா– அவன் அன்புக்கடலிலே –கருணைச்சுனையிலே அவனோடு அவனாக மிதந்து, அமிழ்தினுமினிய தமிழ்மொழியில் என்கவிதா தேவியிடமிருந்து ஆக்கி அளிக்கப்பட்ட இந்த (பாட்டு) தோணியைச் செலுத்திய வண்ணமிருந்தது. மெய்சிலிர்த்தது. கண்ணீர்மல்க, அவன் அருளை அள்ளி அள்ளிக்குடித்துக்கொண்டிருந்தேன் என்ஆன்மப்பசிநீங்குமட்டும். எந்தஜோதிவடிவம் என் முன் நின்றதோ அதே என்னுள் இயங்கி வெளியில் கவிதை மணத்தை வீசுவிப்பதை ஆங்குள்ளோர் அறியார்கள் போலும்! ஏன்? யார்தான் அறிவார்கள்?



- யாரறிவார் -

(1) பேரருளன் பெம்மானும் பெண்ணுனும் யாவுமுளன்
சீரகமே தானிருந்து சின்மயமா யாக்கிடுவன்
தாரகமாய்த் தன்பேரைத் தாரணியிற் செய்தவனும்
சீராமதாஸ னுளம் சேர்ந்ததையே யாரறிவார்?

[2] தேவர்க்கு மரிதாய திருவடியா லருளீவோன்
மூவர்க்கும் முன்னவனும் மோனகுரு சீராமதாஸன்
யாவர்க்கு மின்பத்தை யெளிதாகவே யளிக்கத்
தவக்கோலம் பூண்டிங்கே திகழ்வதையும் யாரறிவார்!

[3] தூயராமச் சின்மயமே துகளில்லாப் பேரின்பம்
தாய்கிருட்டி ணம்மைக்குத் தன்மயத்தைத் தந்தோனும்
காயமதி யற்றோர்க்குங் கரையில்லாக் காருண்யன்
தூயகுரு ராமதாஸனெனத் துலங்குவதை யாரறிவார்!

[4] தந்தையா மெந்தைக்குந் தந்தையென வந்தவனே.
விந்தைசேர் விபுவாகி வேதியனும் சீராமதாஸன்
சிந்தைக்குட் சின்மயமாய்ச் சேர்ந்துள்ள சீராளன்
என்றைக்கு மென்னுள்ளே யிருப்பதையும் யாரறிவார்!

ஒ. இரா. அத்ரி



# திருஅருள் நிறைந்த தெய்வீக அன்னை

அளப்பிலாக்கருணை அன்னையின் மார்பில்
அமைதியாய்த்தூங்குவேன், அதேதரும் சாந்தம்;
கனவுகள் காண்பேன், காண்பவை அவளே;
அன்னையின் இனிமையும் அன்பின் வலிமையும்
அன்றியொன்றில்லை, அயர்ந்தனன்சிறிதே
கண்ணைவிழித்ததும் கண்டதென்சொல்வேன்!
அன்னையின் அருள்ஒளி ஆடலே எங்கும்.
உலகெலாம் அன்னைபோல் உணர்த்தினள், கண்டேன்.
இல்லை, இல்லை, இவளே உலகம்!
இன்பமகிழ்ச்சியால் இதயம் துடித்தது
இந்தநல் உணர்வால் இன்னுல கன்னையைக்
கண்டேன். கண்டேன், கனிவுடன் அணைந்தேன்
அன்னையேயானேன், ஆனந்தமடைந்தேன்,
அகிலமுமானேன், அனைத்துமேயானேன்,

அன்னையின் மடிமிசை அமர்ந்துமேல் கிமிர்ந்து
அன்பினைப் பேசும் ஆர்வநல் லுணர்வுடன்
புன்கண் விழிநீர் பூசலொடுமல்க
அன்னையை நோக்க அணைப்பினை உணர்வாய்!
உனைக்கீழ் விட்டவள் உடன் வெளிப்போந்தால்
'எனை என் செய்தனை' என்றுபின் ஓடி
கழல்களைப்பிடித்துக் கண்ணீர் பொழியக்
கட்டிப்பிடித்துக் கசிந்திடு. விடாதே,
பேசா யொன்றும், பிதற்றுயொன்றும்
விடமாட்டேனென விம்மி நீ நோக்கு,
துடி துடித்தெடுத்துத் துடைத்துனை ஏந்தி
அன்பு மேலுருக அணைத்துனைக் கொஞ்சி
தன்னுடன் உன்னைத் தானே யாக்கி
அன்புடன் அணைப்பாள் அன்னையென்றறி நீ

—சுவாமி ராமதாசர்.

(தமிழ் ஆக்கம்; திரு. க. பொன்னையா அவர்கள்)



# செய்தித் திரட்டு

## அகில இலங்கைச் சிவனடியார் தினம்

ஷை தினம் 10–2–55 வியாழக்கிழமை ஏழாலைச் சைவமடாலயத்தில் Dr. C. குருசாமி அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## அருள் நெறித் திருக்கூட்டக்கிளை அம்பாரையில் உருவாக்கப் பட்டது.

அருட்பெருந்திரு குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் நடைபெறும் தமிழ் நாட்டு அருள்நெறித்திருக் கூட்டத்தின் கிளை ஒன்று அம்பாரை வில்லுப்பிள்ளையார் கோயிலில் 4–2–55 இல் உருவாக்கப்பட்டது. அத்துடன் அன்று கண்ணப்பநாயனர் குருபூஜையும்வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருள்நெறித்திருக்கூட்டத்தின் முக்கிய தொண்டுகளைப்பற்றிய அச்சுப்பிரதியும் வழங்கப்பட்டது.

## அகில இலங்கை இந்துமாமன்றம்

கொழும்பு இந்து கல்லூரி சரஸ்வதி மண்டபத்திலே 6–2–55 ஞாயிற்றுக்கிழமை அகிலஇலங்கைக்கும் ஓர்பொது இந்துமாமன்றம் உருவானது. அத்தருணம் இலங்கையின்பலபாகங்களிலிருந்தும் 45க்கு மேற்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் சமுகம் கொடுத்தார்கள். 110 பிரதிநிதிகளை கொண்டு சங்கமும் உருவாக்கப்பட்டு உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது. தலைவராக முன்னாநாள் இந்தியாவில் இலங்கைத்தூதுவராகக் கடமையாற்றிய திரு. சி. குமாரசுவாமி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இணைச் செயலாளர்களாகத் திருவாளர்கள் கே. ஆழ்வாப்பிள்ளையும் வி. ஏ. கந்தையாவும் தெரிவு செய்யப் பெற்றனர். மாலை நிகழ்ச்சியில் சுவாமி பிரேமாத்மானந்தர் ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் சேர். கந்தையாவைத்தியநாதன் போன்ற பெருமக்கள் சொற்பெருக்காற்றினர்.

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணபரம ஹம்சதேவரின் 120- ஆண்டு பிறந்ததினம்

திதி பூஜையும், குருபூஜையும், நிகழும் பிப்ரவரி மீ 24-ம் தேதி வியாழக்கிழமை நாட்டரம்பள்ளி ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நடைபெறும். அத்தருணம் பஜனை, கீதாபாராயணம், பூஜை, அன்னதானம், ஊர்வலம் என்பன நடைபெறும்.

## ஸ்ரீ சிவராமசங்கீர்த்தன சபை

ஷ சபை பூண்டுலோயாவைச் சேர்ந்த சீனி தோட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டு வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுவழிபாடு, பெரியார் உபதேசங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனந்தாஸ்ரமத்தைச் சேர்ந்த சுவாமி இராமதாசரும் அன்னை கிருஷ்ணபாயும் அத்தோட்டத்திற்குச் சமுகம் கொடுத்தபோது மேற்படி பெயர் அச்சபைக்கு நாமகரணஞ் செய்யப்பட்டது. குறிப்பிடத்தக்கது.

## அகண்ட நாம பஜனை

20-2-55 ஞாயிறு காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணிவரை சிவராத்திரி தினத்தை முன்னிட்டு ஆத்மஜோதி நிலையத்தில் அகண்ட நாம பஜனை நடைபெறும்.

மாலை 8 முதல் காலை 5 மணிவரை கதிரேசன்கோயிலில் பஜனை விஷேட சொற்பொழிவுகள் நடைபெறும்.

## நாமலிகித ஜெப யாகம்

ஆனந்தாசிரமத்துக்கு 10-1-55 வரையில் அனுப்பப்பட்ட புத்தகங்களின்படிக்கு 182,549, 710 நாமங்கள் எழுதப்பட்டுள்ளன. அன்பர்களின் தொகை 4577 ஆகும். சென்ற மூன்று மாதங்களுள் சில அன்பர்கள் முன்போல ஒழுங்காக நாமப் புத்தகங்களை அனுப்பவில்லை. எண்ணிக்கையும் குறைந்து வருகின்றது. யாவரும் கூடியசிரத்தைஎடுத்து தினமும் எழுதும் நாமத்தின் எண்ணிக்கை கூட்டுவதற்கும், தவறாது புத்தகங்களை ஆசிரமத்துக்கு அனுப்புவதற்கும் ஆவன செய்யவேண்டுமென்பது சுவாமி இராமதாஸர் அவர்களது கோரிக்கையாகும். எல்லா அன்பர்களும் இன்னும் அதிக பக்தி சிரத்தையுடன் எழுதினால் 1955ம் ஆண்டு ஐப்பசிமாதத்துக்குமுன்னரேயே குறித்த 25 கோடி நாமங்களும் எழுமப்பட்டுவிடும்.

# MAHATMAS-TRUE & FALSE.

*Darsan* is not mere 'seeing'. Else how often have you seen death-and yet have you learnt what death is? *Darsan* consists not so much in seeing as in reacting to what you have seen.

*Sat-Sang* is not mere company of the wise. The walls of the temple know no God; the desks of the Assembly Hall know no Government; the Mala knows no Japa; the cow of the hermitage understands no Vedanta. But a *Mumukshu* gains in spirituality every moment of his stay in the Guru's presence. How? He watches every action of his Guru, hears every word he utters, and comes to know every thought he thinks. In short the development of the disciple depends upon his capacity to tune himself to his Guru. This tuning to the wise is *Sat-Sang*.

Generally, people have come to believe that Mahatmas can give them roots of secret powers. That is why people have come to demand of Mahatmas cure, money, position, status-in short nothing but mere material gains. 'As the demand so the supply'. Let the people demand for a Yogeswara; the incarnation of Sree Krishna has to and WILL take place NOW, Here! "Ask and thou shalt be given" is an eternal promise. If the people's all-out demand is for mutual slaughter, war they shall have; if theirs be a united sincere demand for peace and progress they shall have them.

Go to the Mahatmas demanding of them spiritual guidance and knowledge. Strave the pretenders if they cannot give you what you demand. Only those who CAN will then come to you. If there be a true demand and an earnest urge for genuine Mahatmas, the Immortal Himalayas shall always supply! Feel. Be sincere. Consciously, react to every experience. Each moment discriminate between the true and the false.

SWAMI CHINMAYANANDA
Co-Editor of The Call Divine, a Monthly
dedicated to Bhagawan Sri Ramana

Regd. at the G. P. O, as News Paper H, C, 59-500

## "ஆத்ம ஜோதி" ஆயுள் சந்தா ஆதரவாளர்கள்

**V.** தர்மலிங்கம் அவர்கள் கொழும்பு

**A. S. T.** பொன்னம்பலம்பிள்ளை அவர்கள்

கெல்லி குறூப், தொளஸ்பாகை.

---



## குமா குருபான்.

மாதந்தோறும், ஆறுதிருமுகங்களோடு கூடிய திருமுருகப் பெருமானின் திருஉருவத்தைத் தாங்கி வெளிவரும் மாத வெளியீடு, ஆஸ்திகர் களுக்கு திருவருட்பிரசாதமாய் உயர்ந்த விஷ யங்களைப் பலதுறையிலும் நின்று விளக்குவது.

**வருடச் சந்தா ரூபா 1 சதம் 50 மாத்திரமே,**

திருப்பனந்தாள் மடத்தாரின் பேருபகாரத்தால் மாத்திரமே இவ்வளவு மலிவாக நடாத்த முடி கிறது, அவர்கள் தொண்டு நீடூழி வாழ்க,

**பத்திரிகை வேண்டுவோர்**

குமரகுருபர சுவாமி மடம்,

ஸ்ரீ வைகுண்டம், (தென் இந்தியா)

**என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்**

---

## அருட்பிரகாச வள்ளலார் வரலாறு.

வள்ளலார் வரலாற்றை திரு, கா, ம, காளிதாசன் அவர் கள் கவிவெண்பாவினால் யாவருக்கும் விளங்கும் வகையில் பாடியுள்ளார். அதனை திரு. எம், வி, முத்துவேல்பிள்ளை அவர் கள் வெளியிட்டுள்ளார்கள், வேண்டுவோர் கீழ்க்கண்ட விலா சத்திற்கு ஒரு அணா தபால் தலை அனுப்பினால் பெற்றுக்கொள் ளலாம்,

**கிடைக்குமிடம்**

**M. V. முத்துவேல்பிள்ளை.** தருமமண்டி,

தாடிக்கொம்பு ரோட்டு, திண்டுக்கல். (தெ. இந்தியா)



Hony. Editor, K. Ramachandran, 60, Deal Place, Colpett,
Printed & Published by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 13-2-55